[19th July 1957

Sri K. ANBAZHAGAN : ஏறத்தாழ இரண்டு லட்ச ரூபாய் அளவிலே திட்டப்படவேண்டிய இந்தத் திட்டத்தைப்பற்றி "சீப் என்ஜினியர்" அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய பதில்கள் ஏறத்தாழ 2, 3 ஆண்டுகள் காலம் ஆகியும் கிடைக்கவில்லை என்ற குறிப்பு பதிலில் காணப்படுகிறது. இது உண்மையானல் சிறு திட்டங்களுக்கெல்லாம் இவ்வளவு கால தாமதம் ஏன் என்பதை அரசாங்கம் அறிவிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்தத் திட்டம்பற்றி கனம் முத்தையா அவர்கள் 1954-ம் வருஷத்தில் எழுதினர்கள். 1955 பிப்ரவரி மாதத்தில் இதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். சாதாரணமாக நீர்ப்பாசன திட்டங்கள் திட்டுவது என்று சொன்னல், பல இடங்களில் 'லெவல்' எடுக்கவேண்டி இருக்கிறது. இந்த திட்டங்களின் மூலமாக பக்கத்து ஜில்லாவுக்கு வசதி செய்யமுடியுமா என்றெல்லாம் ஆலோசனை செய்கிறர்கள். ஆதலால் அதிக காலதாமதம் ஆகிவிடவில்லை என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri C. MUTHIAH PILLAI : இந்தத் திட்டமானது கொள்ளிடத்தின் நடுத் திட்டிலே இருப்பதன் காரணமாக கொஞ்சம் காலதாமதம் நிச்சயமாக ஏற்படும் என்பதை உணர்ந்தாலும், காலதாமதம் ஏற்படுவதால் அங்குள்ள 3,000 மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமலும், சாகுபடிக்கு தண்ணீர் வசதி இல்லாமலும் அவதிப்படுகிறர்கள். கனம் விவசாய மந்திரி நேரில் பார்த்து உத்திரவிட்டு "இன்வெஸ்டிகேஷனுக்கு" சென்ற ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக, இந்தத் திட்டம் அமுலில் வருகிற நிலைமையில் இருக்கிறது. இதைக் கைவிடாமல் எப்படியாவது இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் வரும்பொழுது சொல்லி ஆவன செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இந்தத் திட்டத்தை கைவிடுவதாக உத்தேசம் இல்லை.

Sri M. P. SUBRAMANIAM : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து இந்த திட்டத்திற்கு சுமார் ஒரு ஏகருக்கு 1,000 ரூபாய்க்கு அதிகமாக செலவு என்று தெரியவருகிறது. அப்படியென்ருல் மற்ற பகுதிகளிலும் ஏகர் ஒன்றுக்கு ரூ. 1,000-க்கு அதிகமாக செலவில்லாமல் இருந்தால், அந்தத் திட்டங்களையெல்லாம் அதிக செலவாகிற திட்டம் என்று கருதாமல் சாத்தியமான திட்டங்கள் என்று கருதி அந்தந்த வட்டார என்ஜினியர்களுக்கும், கலெக்டர்களுக்கும் உத்தரவு போடுவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒவ்வொரு திட்டத்தைப்பற்றி அதனுடைய புள்ளி விவரங்களை எடுத்து அதனல் செலவு என்ன, வருமானம் என்ன என்பதை யெல்லாம் பார்த்துதான் திட்டத்தை எடுத்துக் கொள்ளுவதா, இல்லையா என்று முடிவு செய்ய முடியும். பொதுவாக ஏகர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் செலவாகும் திட்டங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டும்மென்பது சரியல்ல.

Sri K. B. S. MANI : இந்த கொட்டாமேடு கிராமம் ஒரு தீவாக இருக்கிறது. சர்க்கார் அங்கு இருக்கும் மக்களுக்கு இந்தச் சலுகையைச் செய்யாவிட்டால், அவர்கள் வேறு எந்தத் துறையிலும் வாழ்க்கையை நடத்துவதற்கு வசதியற்றவர்களாக இருக்கிறர்கள். ஒரு ஏகருக்கு ரூ. 1,000 செலவழிந்தாலும், அல்லது ரூ. 5,000 செலவழிந்தாலும் மக்களுக்கு இதைக் கட்டாயம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : அங்கத்தினர் கேட்கும்பொழுது "அரசாங்கம் செய்யுமா" என்று கடைசியில் சொல்லுங்கள். இல்லாவிட்டால் அது கேள்வியாகாது.